# கிறிஸ்து கீதம் பாடும்

கிறிஸ்து கீதம் பாடும் வானம்பாடி நாங்களே
கிறிஸ்து பாதம் மலரும் எழில் மலர்கள் நாங்களே
கிறிஸ்து பண்ணில் நாங்களெல்லாம் ஒரே ராகமே
கிறிஸ்துவுக்கும் எங்களுக்கும் ஒரே இல்லமே
ஆலயம் எங்கள் ஆலயம் (2)

துன்பமில்லை துயரமில்லை தூயன் வாழ்விலே
தோல்வி என்பதில்லை தேவன் தாய்மை நெஞ்சிலே
மயக்கம் மருட்சி மாயையில்லை ஆயன் அன்பிலே
அவர் இயக்கத்தோட மனித இனம் இரக்கும் வரையிலே
பங்கிலே எங்கள் பங்கிலே (2)

கிறிஸ்து கீதம் பாடும் வானம்பாடி நாங்களே
கிறிஸ்து பாதம் மலரும் எழில் மலர்கள் நாங்களே
கிறிஸ்து பண்ணில் நாங்களெல்லாம் ஒரே ராகமே
கிறிஸ்துவுக்கும் எங்களுக்கும் ஒரே இல்லமே
ஆலயம் எங்கள் ஆலயம் (2)

விண்ணரசின் சோலையிலே மலர்களாகுவோம்
கண்ணெதிரே கடவுள் வர கவிதை பாடுவோம்
ஆன்மயோகம் கிடைத்ததென்று வாழ்த்துக் கூறுவோம்
அந்த ஆண்டவரின் அன்புக்காக நன்றி சொல்லுவோம்
பங்கிலே எங்கள் பங்கிலே (2)

கிறிஸ்து கீதம் பாடும் வானம்பாடி நாங்களே
கிறிஸ்து பாதம் மலரும் எழில் மலர்கள் நாங்களே
கிறிஸ்து பண்ணில் நாங்களெல்லாம் ஒரே ராகமே
கிறிஸ்துவுக்கும் எங்களுக்கும் ஒரே இல்லமே
ஆலயம் எங்கள் ஆலயம் (2)